( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.

CC. No. 138/2022

| | | |
|---|---|---|
| Name | :Ushain basha | **P.W.** 1 (LW1) |
| Father/Husband Name | :Abdul Amed | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : 25.07.2024 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.07.2024.

**முதல் விசராணை – சத்திய பிராமணம் செய்யப்பட்டார்.**

1. நான் கோவளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் மீன் பிடி தொழில் செய்து வருகிறேன்.27/11/2018 தேதி சுமார் மாலை 6.30 மணியளவில் கோவளம் கண்ணியம்மன் கோவில் அருகில் எனக்கு சொந்தமான TN 19P2499 என்ற வோண்ட சைன் இரு சக்கர வாகனத்தை நிறுத்தி விட்டு போட்டை பார்க்க சென்றேன். பிறகு 7.15 மணிக்கு வந்து பார்த்தபோது வாகனத்தை காணவில்லை. தேடி பார்த்தும் கிடைக்கவில்லை. மறுநாள் காலை காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன்.என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் கொடுக்கப்பட்டது அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.(**மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) நான் கொடுத்தபுகாருக்கு மனு ரசீது வழங்கினார்கள்.

2. 29/04/2019 அன்று காவல் நிலையத்தில் இருந்து வாகனத்தை திருடிய நபர்களை கண்டுபிடித்துவிட்டோம் என்றும் வாகனத்தையும் கண்டுபிடித்துவிட்டோம் என்று தெரிவித்தார்கள். காவல் நிலையம் சென்றபோது போலிஸ்சார் விசாரித்தார்கள் வாகனத்தையும் காட்டினார்கள் நான் அடையாளம் காட்டினேன். திருடிய நபர்களில் இரண்டு நபர்களை கைது செய்ததாக கூறி என்னிடம் அவர்களை அடையாளம் காட்டினாாகள் அந்த இரண்டு நபர்கள் இந்நீதிமன்றத்தில் உள்ளார்கள் அவர்கள் ஆஜர் எதிரிகளில் மஞ்சள் நிற சட்டை அணிந்த நபர் மற்றும் அவருக்கு வலது புறமாக நிற்பவரும் ஆவார்கள் ஆனால் அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. ( **சாட்சி மஞ்சள் நிற சட்டை**

**அணிந்த நபர் பிரபாகரன் என்பவரையும் அவருக்கு வலது புறமாக நிற்பவர் எதிரி பார்த்திபன் என்பவர்களை அடையாளம் காட்டினார் )**

3. பிறகு மீண்டும் காவல் நிலையத்தில் மற்றொரு நபரை கைது செய்ததாக தகவல் கொடுத்தார்கள். தேதி எனக்கு நியாபகம இல்லை. காவல் நிலையத்திற்கு சென்றபோது மூண்றாவது நபரையும் அடையாளம் காட்டினார்கள். அவர் பெயர் எனக்கு தெரியாது. **(சாட்சி எதிரி மேகனாதன் என்பவரை அடையாளம் காட்டினார்)** நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து எனது வண்டியை இடைக்கால உத்தரவாக பெற்று கொண்டேன். எனது வண்டியை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துகிறேன்.(**வண்டி எண். TN19P2499 அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சம்பந்தமாக போலிஸ்சார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை –** எதிரிகள் ஆஜர் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர் இல்லை போதிய அவகாசம் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யவில்லை அதனால் இத்துடன் முடிக்கப்படுகிறது.

Sd/- N.Anupriya, 25.07.2024.

Taken down by me in open court read over in the witness in the presence of the accused and admitted by the witness to be correct

DM cum JM/TPR.